


மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா. சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், திறந்தவெளி மலங்கழித்தல் இல்லை என்ற நிலையை தொடர, அனைத்து பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்கள், அரசு அலுவலர்கள் உறுதிமொழியினை கன்னியாகுமரி காந்திமண்டபம் முன்பாக இன்று (21.07.2016) நடைபெற்ற நிகழ்ச்சியில் ஏற்றுக் கொண்டனர். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை (திட்ட இயக்குநர்) திருமதி. டி. கெட்சி லீமா அமலினி உடனுள்ளார்.

செ.வெ.எண் : 463/2016 நாள்: 21.07.2016

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா. சவான் இ.ஆ.ப., அவர்கள், திறந்தவெளியில் மலங்கழித்தல் அற்ற நிலையை தொடர்ந்து கடைபிடிப்பது குறித்து, பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும்வகையில், கன்னியாகுமரி காந்திமண்டபம் முன்பாக நடைபெற்ற மினி மரத்தானை இன்று (21.07.2016) கொடியசைத்து, துவக்கி வைத்து, மனித சங்கிலியில் கலந்து கொண்டார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், திறந்த வெளி மலங்கழித்தல் இல்லாத நிலையை உருவாக்கிட மாவட்ட ஊரக வளர்ச்சியின் முகமையின் மூலம் பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்கள். மேலும் அனைத்து மாவட்டத்திலும் திறந்த வெளியில் மலம் கழித்தால் ஏற்படும் சுகாதார கேடை குறித்து, பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த ஆணையிட்டுள்ளார்கள்.

அதனடிப்படையில் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா. சவான் இ.ஆ.ப., அவர்கள், திறந்தவெளியில் மலங்கழித்தல் அற்ற நிலையை தொடர்ந்து கடைபிடிப்பது குறித்து, பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும்வகையில், கன்னியாகுமரி காந்திமண்டபம் முன்பாக நடைபெற்ற மினி மரத்தானை இன்று (21.07.2016) கொடியசைத்து, துவக்கி வைத்து, மனித சங்கிலியில் கலந்து கொண்டு தெரிவித்ததாவது:.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கன்னியாகுமரி மாவட்டத்தில், 95 கிராம ஊராட்சிகளில் உள்ள ஒரு இலட்சத்து 53 ஆயிரத்து 739 வீடுகளில், ஒரு இலட்சத்து 51 ஆயிரத்து 457 வீடுகளுக்கு கழிப்பறைகள் அரசு மானியத்தாலும், சொந்த செலவிலும் கட்டப்பட்டுள்ளது. அதாவது 98.5 சதவீதம் வீடுகளில் கழிப்பறைகள் கட்டப்பட்டு, பயன்படுத்தப்பட்டு வருகிறது. மீதி உள்ள வீடுகளில் வசிக்கும் மக்களுக்கு பொது சமுதாய கழிப்பறைகள் கட்டப்பட்டும், கட்டுவதற்காகவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது. கழிப்பறைகளை பொதுமக்கள் பயன்படுத்தி கொண்டால், டையரியா போன்ற தொற்றுநோய்கள் ஏற்படாது. மேலும் சுகாதாரம் பேணி காக்கப்படும். இதனை குறித்து, பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலும், திறந்தவெளியில் மலம் கழித்தலற்ற நிலையை தொடர்ந்து கடைப்பிடிப்பதற்காகவும் இன்று (21.07.2016) மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் அகஸ்தீஸ்வரம் ஊராட்சி ஒன்றியம் கன்னியாகுமரி முதல் பொற்றையடி வரையிலும், தோவாளை ஊராட்சி ஒன்றியம் பொற்றையடி ஜங்ஷன் முதல் பறக்கை விலக்கு வரையிலும், இராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றியம் பறக்கை விலக்கு முதல் சுங்கான்கடை வரையிலும், குருந்தன்கோடு ஊராட்சி ஒன்றியம் சுங்கான்கடை முதல் புலியூர்குறிச்சி வரையிலும், தக்கலை ஊராட்சி ஒன்றியம் புலியூர்குறிச்சி முதல் அழகியமண்டபம் வரையிலும், திருவட்டார் ஊராட்சி ஒன்றியம் அழகியமண்டபம் முதல் சுவாமியார்மடம் வரையிலும், கிள்ளியூர் ஊராட்சி ஒன்றியம் சுவாமியார்மடம் முதல் பம்மம் வரையிலும், மேல்புறம் ஊராட்சி ஒன்றியம் பம்மம் முதல் குழித்துறை வரையிலும், முஞ்சிறை ஊராட்சி ஒன்றியம் குழித்துறை முதல் களியக்காவிளை வரையிலும் என கன்னியாகுமரி முதல் களியக்காவிளை (தேசிய நெடுஞ்சாலை) வரை பள்ளி,

கல்லூரி, சுயஉதவி குழுக்கள் மற்றும் ஊராட்சிகளில் உள்ள பொதுமக்கள் என சுமார் 50 ஆயிரம் நபர்கள் கலந்து கொண்ட மனித சங்கிலி நடைபெற்றது. மேலும் கன்னியாகுமரி முதல் நாகர்கோவில் மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் வரை மினி மரத்தான் நடைபெற்றது என தெரிவித்தார்.

நிகழ்ச்சிக்கு முன்பாக திறந்த வெளி மலங்கழிப்பற்ற தூய்மை குமரி, தொடர்வது உறுதி என்ற உறுதிமொழியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், அனைத்து பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்கள், பொதுமக்கள் ஏற்றுக்கொண்டனர்.

அதனை தொடர்ந்து கிராமிய கலைஞர்களின் சிலம்பாட்டம் நிகழ்ச்சியும், கன்னியாகுமரி முதல் நாகர்கோவில் வரை அபுபக்கர் அவர்கள் கண் கட்டியபடி இரு சக்கர வாகனம் ஓட்டின நிகழ்ச்சியும் நடைபெற்றது. மேலும் விழிப்புணர்வு வாசகம் அடங்கிய தொப்பி யூனிசெப் சங்கத்தின் சார்பாக, மினி மராத்தானில் கலந்து கொண்டவர்களுக்கு வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை (திட்ட இயக்குநர்) திருமதி. டி.கெட்சி லீமா அமலினி, மாவட்ட முதன்மை அலுவலர் திரு. வெ.ஜெயக்குமார், நாகர்கோவில் கோட்டாட்சியர் திரு. ஆர். விஜயக்குமார், செயற்பொறியாளர் (ஊரக வளர்ச்சி) திருமதி. எஸ். ஏழிசைச்செல்வி, உதவி திட்ட அலுவலர் திருமதி. எஸ். சுப்புலெட்சுமி, மண்டல அலுவலர்கள், சுகாதாரத்துறை அலுவலர்கள், ஊரக வளர்ச்சி துறை அலுவலர்கள், வருவாய் துறை அலுவலர்கள், பேரூராட்சி அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்கள், கிராமிய கலைஞர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.